**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1,மேட்டூர்**

முன்னிலை: நா.கோபாலகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.

2025–ம் ஆண்டு ஜுலை 30ம் நாள் வியாழக்கிழமை

**பி.ஆர்.சி. எண்.41/2025**

----------

அரசுக்காக : காவல் ஆய்வாளர்,
மேட்டூர் காவல் நிலையம்,
குற்ற எண்.156/2025 .....குற்றமுறையிடுபவர்/ புகார்தாரர்

/எதிர்/

கோபிநாத்(எ) கோபி (44),
த/பெ.ஜெயபால்,
எலிக்கரடுமேல்பகுதி,
மாதையன்குட்டை,
மேட்டூர் தாலூக்கா,
சேலம் மாவட்டம். ...... எதிரி

இந்த வழக்கானது **30.07.2026**–ம் தேதியன்று என் முன்னர் விசாரணைக்கு வந்தபோது அரசுக்காக அரசு உதவி வழக்கறிஞர் நிலை–2 அவர்களும், எதிரி தரப்பில் திரு.**P.A.**நேதாஜி வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகி ஆவணங்களை பரிசோதனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

<u>**உத்தரவு**</u>

1. **அரசுதரப்பு வழக்கின் சுருக்கம்** : இவ்வழக்கில் வாதி பிரபாகரன் (42) த/பெ.பெரியண்ணன் என்பவர் மேட்டூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கோல்நாயக்கன்பட்டி காட்டுரில் குடியிருந்து கொண்டு மேட்டூர் பஸ்நிலையத்தில் கோசப்பழம் தட்டில் வைத்து வியாபாரம் செய்து வருகிறார். எதிரி கோபிநாத் மேட்டூர் **PS** சரகம், மாதையன் குட்டை எலிக்கரடு மேல்பகுதியில் வசித்து வருகிறார். கடந்த **24.03.2025**ம் தேதி காலை **11.00** மணிக்கு வாதி பிரபாகரன் மேட்டூர் பஸ்நிலையத்தில் தட்டில் கோசப்பழம் வைத்து வியாபாரம் செய்து கொண்டு இருந்த போது எதிரி கோபிநாத் வாதியின் அருகில் சென்று வாதியைப் பார்த்து வியாபாரம் செய்து பாக்கெட்டில் எவ்வளவு பணம் வைத்து உள்ளாய்

என்று கேட்டுள்ளார். அதற்கு வாதி எதற்கு கேட்கிறாய் என்று எதிரி கோபிநாத்திடம் கேட்டதற்கு நான் யார் தெரியுமா என் பெயர் கோபிநாத் நான் மேட்டுரில் பெரிய ரவுடி என் மேல் கொலை கேஸ் இருக்குது நான் கேட்டால் பணம் கொடுக்க மாட்டியா என்று அவன் கையில் வைத்திருந்த கத்தியை காண்பித்து பணத்தை கொடு இல்லைனா கொன்றுவிடுவேன் என்று மிரட்டியுள்ளார். வாதி தன் உயிருக்கு பயந்துக் கொண்டு தன் சட்டை பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூ.450–ஐ எடுத்து அவரிடம் கொடுத்துளளார். எனவே எதிரி பணத்தை மிரட்டி பறித்துக் கொண்டு சென்று குற்றம்புரிந்துள்ளார். எனவே எதிரி கோபிநாத் என்பவர் சட்டப்பிரிவு 308(5) BNS –2023ன்படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்தவராகிறார். இறுதியாக மேட்டுர் காவல் ஆய்வாளர் **சட்டப்பிரிவு 308(5) BNS –ன்** கீழ் குற்ற இறுதி அறிக்கை கடந்த 22.06.2025 –ம் தேதி தாக்கல் செய்துள்ளார்.

2. மேற்படி தாக்கல் செய்யப்பட்ட இறுதியறிக்கையின் அடிப்படையில் இந்த நீதிமன்றம் எதிரிக்கு எதிராக **சட்டப்பிரிவு 309(4) r/w 311 BNS**–ன் குற்றத்திற்கு போதுமான அடிப்படை முகாந்திரங்கள் இருப்பதாக குற்றங்களை புலன்கொண்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிட்டது.
3. மேற்படி அழைப்பாணையின் பேரில் எதிரி ஆஜரானவுடன் எதிரிக்கு குற்றமுறையிடுபவர் தரப்பு ஆவணங்களின் நகல்கள் **பாரத குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் பிரிவு** 230–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டன.
4. இவ்வழக்கின் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளின் பேரில் ஏற்பட்ட குற்ற வழக்கானது மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் விசாரிக்கத்தக்கது என்பதால் வழக்காவணங்களை மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்புகை செய்து **பாரத குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் பிரிவு பிரிவு** 232–ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.
5. இவ்வழக்கின் எதிரி பிணையில் இருந்து வருவதால் தொடர்ந்து விசாரணைக் காலங்களிலும் அவ்வாறே இருந்து வர **பாரத குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் பிரிவு 232(ஆ)** –ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.
6. இவ்வழக்கின் சொத்துக்களை (C.P.120/2025) மாண்புமிகு மாவட்ட அமர்வு

நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு **பாரத குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் பிரிவு 232 –** ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

7. இவ்வழக்கின் விசாரணையைத் தொடர்ந்து மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் மேற்கொள்ள சிறப்பு குற்றத்துறை வழக்கறிஞருக்கு அறிவிப்பு அனுப்ப **பாரத குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் பிரிவு 232 –ன் கீழ்** உத்தரவிடப்படுகிறது.

8. எதிரி வழக்கு விசாரணையின் போது வழக்கறிஞர் வைத்துக் கொண்டுள்ளார்கள். அமர்வு நீதிமன்ற விசாரணையின் போது வழக்கறிஞர் வைத்துக்கொள்ள வசதி உண்டா என்று வினவியபோது எதிரி வசதி உண்டு என்று தெரிவித்தார். எதிரியை இவ்வழக்கு விசாரணையின் பொருட்டு மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றம், சேலத்தில் 31.08.2026–ம் தேதியன்று ஆஜர்படுத்துமாறு உத்தரவிடப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு 30.07.2026–ம் தேதியன்று என்னால் அவையறியப் பகரப்பட்டது.

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1, மேட்டூர்.**